அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

**அ.எண்:** 43 /2017
**தேதி:** 22.03.2017

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி நிறுவனர் தலைவர் திரு ஆர் சரத்குமார் அவர்களின் பத்திரிக்கை செய்தி

வரும் ஏப்ரல் 12 ஆம் தேதி நடக்க இருக்கும் ஆர் கே நகர் தொகுதி இடை தேர்தலில் சமத்துவ மக்கள் கட்சி போட்டி இடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறேன். .

வட சென்னை மாவட்ட செயலாளராக கடந்த பத்து ஆண்டுகளாக பணிபுரிந்து, சென்னை பெருமண்டல செயலாளராக கிட்டத்தட்ட நான்கு வருடங்களாக பணிபுரிந்து மார்ச் 2017 முதல் மாநில துணைப் பொதுச்செயலாளர் என பதவி உயர்வு பெற்ற திரு எம் அந்தோணி சேவியர், அவர்களை அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி சார்பில் வேட்பாளராக அறிவிக்கிறேன்.

வடசென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் ராயபுரம் திரு.கே.விஜயன் அவர்களை மாற்று வேட்பாளராக அறிவிக்கிறேன்.

எங்களது கடும் உழைப்பும், இளைஞர்களின் விழிப்புணர்ச்சியும், ஆர் கே நகர் தொகுதி மக்களுக்கு ஜனநாயகத்தின் மேல் உள்ள நம்பிக்கையும் வெற்றி வாய்ப்பை உறுதி செய்யும் என்ற மிகுந்த நம்பிக்கை எங்களுக்கு உள்ளது.

ஆர் கே நகர் தொகுதியின் பிரச்சனைகளை முழுவதும் அறிந்த திரு எம் அந்தோணி சேவியர் அந்த பிரச்னைகளை தீர்ப்பதற்கும் இந்த தொகுதியின் முன்னேற்றத்திற்கும் உழைக்க காத்திருக்கிறார் என்பதையும் தெரிவித்து கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர் சரத்குமார்**
நிறுவனர் - தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com